அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624

அ.எண் : 128/2016

தேதி : 10.08.2016

**கூடங்குளம் அணுமின் நிலைய 1 வது அலகு நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
மாண்புமிகு தமிழக முதலமைச்சர், பிரதமர் மோடி, அவர்களுக்கு
அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் வாழ்த்து**

இந்திய ரஷ்ய நாடுகளுக்கிடையே நல்லுறவு மற்றும் கூட்டுறவை மேம்படுத்தும் வகையில் கூடங்குளம் அணுமின் நிலைய 1 வது அலகு இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

பல கோடி ரூபாய் முதலீட்டால் செயல்படும் கூடங்குளம் அணுமின் நிலையத்தால் மின் பற்றாக்குறை முற்றிலும் தடுக்கப்படும். கடந்த 2014 ஆம் ஆண்டு முதலாவது அணு உலை தனது முழு உற்பத்தி அளவான 1000 மெகாவாட்டை தாண்டி 1009 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து சாதனை படைத்தது. சர்வதேச தரத்துடன் பாதுகாப்பாக இந்த கூடங்குளம் அணு உலை அமைக்கப்பட்டுள்ளது. கூடங்குளம் உலைகள் WWER(Water Water Energy Reactor) எனப்படும் ரஷ்ய தொழில்நுட்பத்தால் ஆனவை. உலகளாவிய அணு உலைத் தொழில்நுட்பத்தில் இது மிக உயர்ந்த உச்சகட்ட பாதுகாப்புடன் கூடியது. ஏதேனும் விபத்து ஏற்படும் போது அணு உலைகள் தானியங்கி முறையில் மூடப்படும். எனவே கதிர்வீச்சு ஏற்படாது. காற்று மண்டலத்திலும் கலக்காது.

பல்வேறு இடையூறுகளுக்கும், எதிர்ப்புகளுக்கும் இடையே தொலைநோக்கு சிந்தனையுடன், தமிழக மக்களின் நலன் கருதி, உறுதியாக நின்று கூடங்குளம் அணுமின் நிலையம் செயல்படுவதற்கு மிக முக்கிய காரணமாக இருந்த மாண்புமிகு தமிழக முதலைமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவரது முயற்சியால் செயல்பட்டு வரும் கூடங்குளம் அணுமின் நிலையம் தமிழகத்தின் மின் பற்றாக்குறையை போக்கி, தமிழகம் மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

இது போன்ற திட்டங்களால் கல்வி, தொழில், விவசாயம் என அனைத்து துறைகளிலும் மக்கள் வாழ்க்கை மேம்படும். கூடங்குளம் அணுமின் நிலைய 1 வது அலகு இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருப்பது தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல் இந்திய நாட்டு மக்களுக்கும் மிகுந்த பெருமை அளிப்பதாக உள்ளது.

எனவே இத்தகைய அணுமின் நிலைய அர்ப்பணிப்பை அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் பிரதமர் மோடி அவர்களுக்கும் என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் B.Sc
தலைவர்